# CENTER FOR THE STUDY OF HUMAN RIGHTS
## UNIVERSITY OF PERADENIYA
## PERADENIYA, SRI LANKA


## <u>மனித உரிமைகள் சான்றிதழ் கற்கைக்கான விண்ணப்பம் கோரல்</u>

பேராதனைப் பல்கலைக்கழக மனித உரிமைகள் கற்கை நிலையத்தினால் 2026இல் நடத்தப்படவுள்ள மனித உரிமைகள் சான்றிதழ் கற்கை நெறிகளுக்குத் தகுதி பெற்ற இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**கற்கைநெறிக்கான தகைமைகள்**

- ➢ பேராதனைப் பல்கலைக்கழகம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் மாணவராக பதிவு செய்யப்பட்டிருத்தல்.

**அல்லது**

- ➢ க.பொ.த (உ/த) பரீட்சையில் ஒரே தடவையில் 03 பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.

**அல்லது**

- ➢ க.பொ.த (சா/த) பரீட்சையில் ஒரே தடவையில் 06 பாடங்களில் சித்தியடைந்து, பின்வருவனவற்றுள் ஏதாவதொன்றினை உறுதிப்படுத்தக் கூடியவராக இருத்தல்.
- ❖ சிவில் சமூக செயற்பாடுகளில் ஈடுபடுபவராக இருத்தல்.
- ❖ மனித உரிமைகள் அல்லது சமூக அபிவிருத்திப்பரப்பில் செயற்படும் அரச சார்பற்ற நிறுவனமொன்றில் செயற்பாட்டாளராக இருத்தல்.
- ❖ 2 வருட கால சேவை அனுபவத்தைப் பெற்ற அரச அல்லது தனியார் நிறுவனமொன்றில் சேவை புரிபவராக இருத்தல்.

**கற்கை நெறிக்கான காலம்**:- 02 மாதங்கள் **மொழி மூலம்**: தமிழ் மற்றும் சிங்களம்

**கற்கை நெறிக்கான கட்டணம்**: ரூபா 20,000/= (இரு தவணை அடிப்படையில் செலுத்தலாம்)

**விண்ணப்பப்படிவக் கட்டணம்** : ரூபா 1000/=

**<u>கவனிக்குக:</u>**

- கற்கைநெறிக்கான விண்ணப்பப்படிவக் கட்டணம் 1000/= ரூபாவினை இலங்கை வங்கியிலுள்ள (BOC) கலைப்பீட ஆய்வு மற்றும் நிதி, பேராதனைப் பல்கலைக்கழகம் (**Arts Faculty Research and Fund, University of Peradeniya**) என்ற பெயருடைய **0001274686** வங்கிக்கணக்கு இலக்கத்திற்கு வைப்பிலிட்டு அதற்கான பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்துடன் இணைத்து அனுப்புவது கட்டாயமானது.

கற்கைநெறிக்கான விண்ணப்பங்களை <u>http://arts.pdn.ac.lk/cshr/</u> அல்லது <u>http://arts.pdn.ac.lk</u> இணையதளத்தினூடாகவும் பெற்றுக்கொள்ள முடியும். மனித உரிமைகள் சான்றிதழ் கற்கைநெறி விண்ணப்பப்படிவத்தை 31.07.2026 இற்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியவாறு கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பணிப்பாளர்,
மனித உரிமைகள் கற்கை நிலையம்,
புதிய கன்னங்கரா கட்டிடம்,
கலைப்பீடம், பேராதனைப் பல்கலைக்கழகம்.

Dean
Faculty of Arts
University of Peradeniya